1987 மே 4]

பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய சிவாவின் சமாதி இருக்கிற காரணத்தால், தர்மபுரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற காரணத்தால், சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக ஒகனேக்கல் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் திரு. சுப்பிரமணிய சிவாவின் நினைவுச் சின்னம் ஆகியவற்றோடு பாரத மாதா கோயிலையும் ஒருங்கிணைத்து அமைத்தால் சுற்றுலா வளர்ச்சி நன்கு அமைவதோடு முன்னேற்றமடையவும் உதவியாக இருக்கும் என்பதால் அதற்கு அரசு வழிவகை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகனேக்கல்லின் தொங்கு பாலம் இன்னும் நான்கு அல்லது ஐந்து மாதங்களில் முடிவு பெற்றுவிடும். எனவே போகிற பாதையில் இவருடைய நினைவு இடம் இருக்குமானால் அதையும் சுற்றுலாப் பயணிகள் பார்த்துச் செல்லுவதற்கான வகையில் அதைக் கவர்ச்சிகரமாகச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில் அங்கே பாரத மாதா கோயில் அமைக்கப்படவில்லை என்றும், பாரதபுரம் என்பதற்கான அடிக்கல் மட்டும் நாட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். எனவே, குறைந்தபட்சம் பாரதபுரம் என்ற பெயரில், மறைந்த திரு. சுப்பிரமணிய சிவாவுக்கு நினைவு அஞ்சலியாக அங்கே ஒரு குடியிருப்பையாவது அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய ஆவலாய் இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்துபற்றி அரசு ஆய்வு செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### சுற்றுலா மையங்கள்

577—(* வினா எண் 9534) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாபனாசத்தைச் சுற்றுலா மையமாக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாபநாசம், மாவட்ட உலாத்தலமாகத் தேர்வு செய்யப்பட்டு, அங்கு சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது, வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 5,40,800 மதிப்பீட்டுச் செலவில் மேம்பாட்டு வேலைகள் நடந்து வருகின்றன.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கொற்கையை ஒரு சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்துத் தனியாக வினா போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தை மாவட்ட சுற்றுலா மையமாக அனுமதிப்பதற்கு என்ன வரையறைகளை அரசு கையாளுகிறது? ஒரு இடத்தை மாவட்ட மையமாக அனுமதித்தால் அந்த இடத்திற்கு என்னென்ன வசதிகளை அரசு செய்கிறது? அங்கே வருகிற யாத்திரிகர்களுக்கு அரசு ஏதாவது சிறப்பு வசதிகளைச் செய்து கொடுக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்தில் இரண்டு முக்கியமான தலங்கள் மாவட்ட உலாத் தலங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதில் சுற்றுலாத் துறை ரூ. 2 லட்சமும், போக்குவரத்துத்துறை ரூ. 3 லட்சமும் ஆக மொத்தம் ரூ. 5 லட்சம் மதிப்பீட்டில் அவை கள் மேம்பாடு செய்யப்படுகின்றன. அங்கே பயணிகள் வந்தால்

1987 மே 4]

தங்கவும், சிற்றுண்டிச்சாலையும் மற்றும் குளியல் அறையும் கழிப் பறை வசதிகளும் செய்து தர வகை செய்யப்படுகிறது. மேலும் ரோடு வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வினாப்பட்டியலில் ஏறத்தாழ 4 அல்லது 5 இடங்களைக் குறிப்பிட்டு இவை சுற்றுலா மையமாக ஆக்கப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கிற நிலையைப் பார்க் கிறோம். இதைக் காட்டிலும் அமைச்சர் அவர்களே ஒட்டு மொத்தமாக இன்னின்ன இடங்கள் சுற்றுலா மையங்களாக ஆக்கப்படும் என்றோ அல்லது இனி சுற்றுலா மையங்களாக ஆக்குவதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறது என்றோ அறிவித்துவிட்டால் நேரமும் மிச்சமாகும். மேலும் எல்லோருக்கும் தகவலும் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நான் பார்த்துக் கொள்கிறேன்.

578—(* வினா எண் 9563) **திரு. மு. மாரிமுத்து:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"திருப்பரங்குன்றம்" சுற்றுலா மையமாக அறிவிக்கப் பெறும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. மு. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு படைவீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றம்—முருகப் பெருமான் குடியிருக்கும் அந்த நகரத்திற்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். பல்லா யிரக்கணக்கான பக்தர்கள் குடிநீர் வசதி, தங்குமிட வசதி மற்றும் கழிப்பிட வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த வசதிகளைச் செய்து தருவதற்கு பேரூராட்சிமன்ற நிர்வாகத் திற்கு நிதிவசதி இல்லை. எனவே இதைக் கருத்தில் கொண்டு மைய—மாநில அரசுகளிடமிருந்து நிதி உதவி பெற்றிட எதிர் காலத்திலாவது திருப்பரங்குன்றம் ஒரு சுற்றுலா மையமாக அறிவிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.